REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 17உ சனி (30—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 18உ ஞாயிறு (1—5—55) [இதழ் 273

## உயர்தரத் தொழில் நுணுக்க நிலையம்

ரஷ்ய உதவியுடன் பம்பாயில் அமைகிறது

மேலை நாட்டு முறைப்படி பம்பாயில் துவக்கப்பட இருக்கும் உயர்தரத் தொழில் நுணுக்க நிலையம் சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

இந்த நிறுவனத்திற்கான கருவிகளையும் தொழில் நிபுணர்களையும் தந்து உதவ ரஷ்யா ஒப்புக்கொண்டிருக்கிறதாம். இந்தியாவில் இதுபோன்ற நான்கு நிலையங்கள் ஏற்படுமென்றும் அவற்றில் ஒன்றேனும் தென்னிந்தியாவில் இடம் பெறுமென்றும் தெரிய வருகிறது.

# 46,000 தொழிலாளர் வேலை இழப்பர்!

## வட இந்திய ஆலை - முதலாளிகள் எச்சரிக்கை

## காரியமாற்றி வேலைநிறுத்தத்தைத் தவிர்க்க சர்க்காருக்கு யோசனை!

### வட இந்திய மில் தொழிலாளர் போராட்டம் வலுக்குமா?

கான்பூர், ஏப். 30—

"மே திங்கள் இரண்டாம் நாள் வடக்கே நடைபெற இருக்கும் பஞ்சாலைத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் சமுதாய விரோதமானது—தொழில் விரோதமானது—சட்ட விரோதமானது," என்று, வட இந்திய ஆலை முதலாளிகள் சங்கம் கூறியிருக்கிறது.

"இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றால், அதன் மூலம் உடனடியாக 46,000 தொழிலாளிகள் வேலை இழக்க நேரிடும்," என்று முதலாளிகள் சங்க அறிக்கை எச்சரித்திருக்கிறது.

ஆலைத் தொழில் அழிந்து போகாமல் இருக்க வேண்டுமென்றால், அதில் சீர்திருத்தம் அவசியம் செய்யப்பட வேண்டுமென்றும், தொழிலாளர் உறவு பாதிக்கப்படாமல் அத்தொழிலை சீர்திருத்தி புனரமைக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

ஏற்படப்போகும் வேலை நிறுத்தத்தினால், நாடு, தினம் ஒன்றுக்கு 10-லட்சம் கெஜ துணி உற்பத்தியை இழந்துவிடுமென்றும், ஆடை உடுத்துவோரில் 90,000 பேர்களை இந்த வேலை நிறுத்தம் பாதிக்குமென்றும், ஆயிரக்கணக்கில் பஞ்சு விளைவிக்கும் விவசாயிகள் தொல்லையுறுவர் என்றும் முதலாளிகளின் சங்க அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

வடநாட்டு பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியைப் போக்க உயர்தரக் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவ நாராயண் ஆலோசனை கூறியிருக்கிறார்.

வேலை நிறுத்தத்தைக் கைவிட தொழிலாளர் தலைவர்களைக் கோருமுன்பாக, சர்க்கார், திட்டமான நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்து, அதன்மூலம் தொழிலாளரின் மனதில் நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டுமென்று அவர் மேலும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## ஐ. சி. எஸ். அதிகாரி 'சஸ்பெண்ட்'

பஞ்சாப் சர்க்கார் அலுவலகத்தில் தனி ஐ. சி. எஸ். அதிகாரியான ஆர். பி. கபூர் என்பவரை பஞ்சாப் சர்க்கார் 'சஸ்பெண்டு' செய்துவைத்திருப்பதாக, இன்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கபூர் உள்நாட்டு இலாகா செயலாளராக இருந்தவர். 16 ஆண்டு காலம் பணி புரிந்திருக்கிறார்.

மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதவராலயத்தில், முதல் செயலாளராகவும் பணி புரிந்திருக்கிறார்.

அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்களைக் கூற, சர்க்கார் வட்டாரம் மறுத்துவிட்டதாம்!

## ஞாயிறு நள்ளிரவு முதல் 10,000 பேர் வேலை நிறுத்தம் செய்வர்!

### சமரசப் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதின் விளைவு

பிரிட்டன் இரயில்வே தொழிலாளருக்கும் நிர்வாகிகளுக்குமிடையே சம்பள உயர்வுக் கோரிக்கை சம்மந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன.

ஞாயிறு நள்ளிரவிலிருந்து தொழிலாளர் வேலை நிறுத்தத்திலீடுபடுவர் என்று தெரியவருகிறது.

பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று கூறப்படுகிறது.

## எப்படி விட்டு வைப்பார்கள்?

1857-ம் ஆண்டு முதல் இந்தியாவில் சுதந்திர இயக்கங்களில் ஈடுபட்டவர்கள் பற்றிய இரகசிய போலீஸ் அறிக்கைகள், 1946-ல், இடைக்கால சர்க்கார் ஏற்படுமுன்பே அழிக்கப்பட்டு விட்டதாக மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அறிவித்திருக்கிறார்.

## தாழ்த்தப்பட்டோரைத் தாக்கிய போலீஸ் குழுவினர்

## தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம்

சௌராஷ்டிர சர்க்கார் நடவடிக்கை

இராஜ்கோட்டை, ஏப். 29—

தாழ்த்தப்பட்டோர் சிலரைத் தாக்கியதாகக் கூறப்படும் ஒரு போலீஸ் குழுவிலிருந்த அத்தனை பேரையும் தற்காலிகமாக, வேலையிலிருந்து நீக்கிவைத்து சௌராஷ்டிர சர்க்கார் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

நந்தார்க்கி எனுமிடத்தில் ஏப். 23-ந் தேதி மாலை ஒரு போலீஸ் குழுவினரால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிலர் தாக்கப்பட்டதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்ததாம்.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்மணி ஒருவரை நீதிமன்றம் ஒன்றில் ஜஜ ராகுபாத 'வாரண்ட்' பிறப்பித்ததாயும், இதை நிறைவேற்றவிடாது தாழ்த்தப்பட்டோர் சிலர் ஆட்சேபம் கிளப்பியதாயும், அவர்களை போலீசார் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

'சஸ்பெண்ட்' செய்யப்பட்டவர்கள்மீது தொடர்புடையதிலாகா தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சம்பவம் உண்மையானால் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் சர்க்கார் உத்தரவு கோருகிறதாம்.

## எதிர்பார்த்ததுதானே!

இந்தியாவில் நிறுவப்படும் அடுத்த உருக்குத் தொழிற்சாலையை மேற்கு வங்க மாநிலத்தில் துர்க்காபூரில் ஏற்படுத்தலாமென பிரிட்டிஷ் உருக்கு ஆலைக் குழுவினர் இந்தியப் பேரரசிற்கு சிபாரிசு செய்துள்ளனராம்.

## கைத்தறித் துணி

### விற்பனைக்கு மேலும் சலுகை வேண்டும்

கைத்தறித் துணிகளுக்குத் தரப்பட்டு வரும் கழிவுத் தொகையை (ரிபேட்) ரூபாய்க்கு ஒன்றரை அணாவிலிருந்து 2 அணாவாக உயர்த்த வேண்டுமென இந்தியப் பேரரசை சென்னை சர்க்கார் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கைத்தறி வாரத்தின்போது கழிவுத் தொகை 2 அணாவாக மாற்றப்பட்டதால், 3 லட்ச ரூபாய்க்கு அதிக விற்பனை நடைபெற்றது என்பதைக் காட்டி இந்த சலுகை நீடிக்க வேண்டுமென சென்னை சர்க்கார் வலியுறுத்தியுள்ளதாம்.

## இந்தியைத் திணிப்பது பற்றி

அடுத்த வாரம் அறிக்கையாம்!

உத்தியோகங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைகளில், இந்தியை உபயோகிப்பது பற்றி உள்நாட்டிலாகா மந்திரி பண்டித வல்லப பந்த், மக்கள் சபையில் அடுத்த வாரம் ஒரு அறிக்கை வெளியிடுவார் என்று மக்கள் சபை வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

## ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்!

கல்கத்தா, ஏப். 29—

கடந்த 5 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கிழக்கு பாகிஸ்தான் வழியாக முதன் முறையாக 'கூட்ஸ்' வண்டி ஒன்று மேற்கு வங்கத்தின் வடபகுதியில் விநியோகிக்கப் படுவதற்கான பொருள்களை ஏற்றிக்கொண்டு கல்கத்தாவிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

அரிசி, உப்பு, சர்க்கரை, இறுகிய பால், கண்ணாடிச் சாமான் முதலியவற்றை இந்த வண்டி ஏற்றிச் சென்றது.

## மே தின வரலாறு!

★

15 மணி நேர வேலை; 12 மணி நேரம் இயந்திரத்திற்கடியிலே! 'முடியாது; நாங்களும் மனிதர்கள்தான்,'—இந்த மூல முழக்கம் அமெரிக்காவில் கிளம்பியது—1878-ல்!

மூல முழக்கம் வலுத்து, பாட்டாளிகள் தமது உரிமையைக் கோரி வேலை நிறுத்தம் செய்தனர், அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத் தொழிலாளர்கள்! 'எட்டு மணி நேரம் வேலை செய்வோம்' என்று கிளம்பிய எதிரொலியைக் கண்ட ஆதிக்கபுரி, தொழிலாளர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கிற்று. தொழிலாளர்கள் குருதி கொட்டிய அத்தினமே மே முதல் தினம்—இது, 1886-ல்!

சர்க்காரின் அடக்குமுறை கண்டு கொதித்தெழுந்த தொழிலாளர்கள் மாபெரும் கண்டனம் காட்டினர். அதைக் கலைக்க, அமெரிக்க அரசு, போலீஸ் படைகளை அணிவகுத்து அனுப்பியது; இதுவும் சிகாகோவில்தான்—மே நாலாந்தேதி நடைபெற்றது, இந்நிகழ்ச்சி! யாரோ சிலர், போலீஸ் படைகள் மீது வெடிகுண்டு வீசினர்—1886-ல்!

நாடெங்கும் கைது! நான்கு பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, ஓராண்டு வழக்கு நடைபெற்றது; கடைசியில், அந்த நான்கு தொழிலாளருக்கும் தூக்குத் தண்டனையளிக்கப்பட்டு, பட்டப் பகலில் நிறைவேற்றப்பட்டது நால்வர் பிணமாயினர்—நவம்பர் 11-ந் தேதி—1887-ல்!

உலகமே கலங்கியது! உலகத் தொழிலாளர் அதிர்ச்சியடைந்தனர்! அதனால், பாரிசில் கூடிய அகில உலகத் தொழிலாளர்கள், அந்நாளை, 'உலகப் பாட்டாளி மக்களின் எழுச்சி தின'மாகக் கொண்டாடவேண்டுமென முடிவு செய்தனர். மே தினம் உண்டாயிற்று—தீர்மானம் மூலம்—1889-ல்!

## கோவா விடுதலைப் போர்

### 75 தொண்டர்கள் எல்லையில் நுழைந்தனர்

கோவா ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 75 தொண்டர்கள் அறப்போரில் ஈடுபடுவதற்காக இன்றிரவு நள்ளிரவுக்குச் சற்று முன்பாக போர்த்துகீசிய டாமன் எல்லையில் நுழைந்தனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

அவர்கள் 4 முனைகளிலிருந்து, 20 மைல் நீளமுள்ள சூரத்-டாமன் எல்லையில் நுழைந்தனராம்.

## அதுதானே பாக்கி!

'கிஸான் ஸ்பெஷல்' இரயில்கள்

மத்திய மாநில சர்க்கார் இலாகாக்களின் சார்பில் வரும் மே மாதம் முதல் 'கிஸான் ஸ்பெஷல்' இரயில்கள் விடுவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்துதர இரயில்வே அதிகாரிகள் தயாராகஇருப்பதாகத் தெரிய வருகிறது.

## திராவிடத்தின் வளம் வளருகிறது!

ஆந்திர மாநிலத்தில், கோதாவரி நதியின் இடது கரையில் உள்ள கொத்தகூடத்திற்கு அருகில் நிலக்கரி படிவங்கள் உள்ள பிரதேசங்கள் இருப்பதை இந்திய பூகோள ஆராய்ச்சி நிறுவனத்தார் கண்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

## சலுகை விரிவாகிறதாம்

இதுகாறும் கெஜட் பதிவில்லாத உத்தியோகங்கள் சம்பந்தப்பட்ட வகுப்பினருக்கு அதிகபட்ச வயது எல்லையில் 5 ஆண்டு அளிக்கப்பட்டு வந்த சலுகையை மத்திய சர்க்கார் கெஜட் பதிவு பெற்ற உத்தியோகங்களுக்கும் விரிவாக்குவது என இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—4—’55 சனி

# மே தின விழா!

“விளையாட நேரமில்லை, என் செல்வமே! நாளை விடிவதற்குள் எழுந்து வேலைக்குச் செல்ல வேண்டும்; நீ போய்த் தூங்கு,” என்று தன்னுடன் கிள்ளை மொழி பேசும் குழந்தையைத் தூங்க வைத்து, தானும் கண் அயரச் செல்கிற தொழிலாளி;—

“வெண் நிலவு மறையுமட்டும் உன் கொஞ்சு மொழியைக் கேட்கத் தடையில்லை; ஆனல், ஆலைச் சங்கு ஊதிவிடுமே—அபாய அறிவிப்பல்லவா அது?” என்று தன் அருமை மனைவியிடம் கூறி, ஏக்கத்துடன் நித்திரைக்குச் செல்லும் தொழிலாளி;—

“உழைக்கிறேன்—உள்ளத்தில் கள்ளமில்லாது; என் நரம்புகளை எல்லாம் இயக்கி, பொருள்களை உருவாக்குகிறேன்; ஆனல், என் குடும்பமோ பட்டினியால் வாடுகிறது; இதைக் கேட்பாரில்லையா?” என்று கேட்கும் தொழிலாளி;—

“கல் உடைக்கிறேன்; கனத்த இரும்புப் பாறையை வளைக்கிறேன்; ஆனல், முதலாளி என்னை வஞ்சித்து வாழ்கிருனே—இதற்கு ஓர் மாற்றமில்லையா?” என்று கேட்கும் தொழிலாளி;—

“கொட்டும் மழை, கொடுமை விளைவிக்கும் பனி, மண்ணை உருக்கும் வெய்யில்—இவற்றிடையே சிக்கி உழைக்கிறேன்; உழைப்புக்குத் தக்க ஊதியமில்லையே, என்?” என்று குமுறும் தொழிலாளி;—

“நமக்காகத்தான் இந்த நாடும், இதை ஆளும் சர்க்காரும்—என்கிருர்கள்; ஆனல், தொழிலாளர்களாகிய நாம் வாடுகிருேம்; நமது உழைப்பின் பயனல் உயர்வடைகின்றனர் ஒருசாரார்; இது நீதியா?” என்று உரத்த குரலுடன், விம்மும் இதயத்துடன் கேட்கும் தொழிலாளி;—

இவர்களனைவருக்கும் இன்று ஒரு நாள்—வெற்றி நாள்! மகிழ்ச்சி நாள்! மே திங்கள் முதல் நாள், மேதினியில் வாழும் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு பொன்னுள்!

“அடிமைகளாக வாழமாட்டோம்; அவனியில் ஒருசாரார் உயரவும், அவர்கள் உயர்வுக்கு வித்திடும் மக்கள் கூட்டம் தாழவும் அனுமதிக்கும் நிலைகூடாது—கொடிது; அது ஒழிக்கப்படவேண்டும்,” என்று தொழிலாளர் வர்க்கம் முரசு கொட்டிய நாள் மே முதல் நாள்!

இந்தத் திருநாள் ஒரு நாட்டவருக்கு மட்டும் உரித்தானதல்ல; அப்படிப்பட்ட நாட்களும் இருக்கின்றன; ஏகாதசித் திருநாள் இருக்கிறது—எத்தர்களின் மகிழ்வுக்காக மட்டும்! கிருஷ்ண ஜயந்தி இருக்கிறது—நம் நாட்டில் மேலும் மடமையை வளர்ப்பதற்காக மட்டும்! ஆனல் மேதின விழா அனைவருக்கும் திருநாள்!

ஆப்பிரிக்கநாட்டில் வெள்ளையரின் கொடுமைக்கு இலக்காகி அல்லல் படும் நீக்ரோவுக்கும், சோவியத் பூமியிலே விடுதலை பெற்று களிப்புறும் தொழிலாளிக்கும், இன்று ஒருநாள் தான் தனித் திருநாள்!

அது போல், திருவிடத்திற்கும் இன்று ஒரு மகிழ்ச்சி நாள்!

இங்கே பலநாட்கள் உண்டு; ‘பரமபதம்’ அடையவும், ‘பாவ மன்னிப்பு’ப் பெறவும், கும்பமேளா போன்ற விழாக்கள் உண்டு; கருத்தை குருடாக்கவும், மனிதனை அடிமையாக்கவும் எத்தனையோ நாட்கள் உண்டு; விழாக்கள் இருக்கின்றன—எழுதி வைத்திருக்கிருர்கள் அப்படி.

மேதிருநாள் இவைபோன்ற நாட்களிலே ஒன்று அல்ல!

அந்த நாட்களெல்லாம், புராணிகரின் வாழ்வைவளர்க்கவும், திருவிடத்து மக்களின் வாழ்வைப் பலியிடவும் ஏற்படுத்தப்பட்டன!

மே திருநாள், பரமபதம் சேர பக்தியுடன் சேவை செய்யும் நாள் அல்ல! நாட்டின் மேன்மைக்காக உழைக்கும் தொழிலாளர்கள், தங்கள் மகிழ்ச்சியைப் பெறும் நாள்; தொழிலாளர் உலகுக்கு உலகம் நன்றி செலுத்தும் திருநாள்!

இத்திருநாளை பகுத்தறிவு இயக்கத்தினராகிய நாம் பல ஆண்டுகளாகக் கொண்டாடி வருகிருேம். சம்பள உயர்வு, வேலை நேரக் குறைவு இவை கிடைப்பதால் மட்டுமே தொழிலாளர் வர்க்கம் நம் நாட்டிலே விடுதலை பெற்ற சமுதாயமாக மாறிவிடாது; அவையும் வேண்டியதுதான் — அவசியமானதுங்கூட!

அத்துடன் மட்டுமின்றி, தொழிலாளர்கள் உள்ளங்களில் ஊறிப்போயிருக்கும் மடமை எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்; அப்போதுதான், தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் பயனை அதிக அளவில் அனுபவிக்க முடியும்—என்பதை, பகுத்தறிவு இயக்கத்தினராகிய நாம் கடந்த சில ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிருேம். அந்தப் பணி நற்பயனைத் தந்திருக்கிறது என்று அறிவதில் நாம் பெருமை கொள்கிருேம்.

திராவிடமெங்கும் நடைபெறுகின்ற மே தின விழாப் பொதுக் கூட்டங்கள், தொழிலாளர்களின் மகிழ்ச்சிக் கூடங்களாக விளங்கப் போகின்றன.

ஒரு காலமிருந்தது—தொழிலாளர்கள் என்ருல், அவர்களுக்கென்று தனி மதிப்பு எதுவுமே இல்லாத காலம்: ‘தொழிலாளர்கள் எனப்படுவோர் முதலாளிகளின் செல்வத்தைப் பெருக்கவே பிறந்தவர்கள்,’ என்று பேசப்பட்ட காலம்; இன்று, ஆலைத் தொழிலாளியின் பெருமை பற்றியும், இரயில்வே தொழிலாளியின் சக்தி பற்றியும், நாட்டிலுள்ளோர் அனைவரும் பேசுகின்ற காலமாக மாறிவிட்டது; சில நேரங்களில் முதலாளிமார்களே கூட தொழிலாளர்களின் பெருமை பற்றிப் பேசுவதைக் காண்கிருேம்.

இந்த மாற்றம், பெரும் பண முதலைகளின் மனமாற்றத்தாலோ, தாராள மனப்பான்மையினுலும் ஏற்பட்டதல்ல; கொடுமையை எதிர்த்து உலகமெங்கிலும் தொழிலாளர் பெருமக்கள் நடத்திய போராட்டங்கள்—புரட்சிகள் ஏற்படுத்திய விளைவுகளால்தான் ஏற்பட்டது.

இன்று தொழிலாளர்களின் பெருமை பற்றிப் பேசவும், கவி பாடவும், பண் இசைக்கவும் முடிகிறது. இப்பெருமையை நமக்கு தேடித் தந்து மறைந்துபோன தொழிலாளர்களுக்கும் இந்த மே தின விழாவன்று நன்றி செலுத்துவோம்; அதன் பின்னர், நமது பணியென்னவென்று ஆராய்ந்து முடிவெடுப்போம்.

நகர்கள்தோறும், சிற்றூர்கள்தோறும் தொழிலாளர்களிடையே காணப்படும் மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்கிருேம்.

திராவிடத்தில் இதுவரை நடைபெற்ற மே தின விழா நிகழ்ச்சிகளைக் காட்டிலும், இப்போதைய விழாவில் ஒரு புது மகிழ்ச்சி காணப்படுகிறது.

சென்ற சில மாதங்களுக்கு முன்னர் பேரூரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் தொழிலாளர் வாழ்வுபற்றி நிறைவேறிய தீர்மானம், இன்றைய மே தின விழாவில், மகிழ்ச்சியை அதிகமாக்குகிறது.

‘தொழிற் சங்கங்களில் நேரடியாகத் தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவதென்ற அரக்கோணம் பொதுக் குழுவின் 1953-ம் வருட மே மாத 31-ம் தேதி தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் முறையில் ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் தொழிலாளர் பகுதிகளில் பணி புரிந்து தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படி கேட்டுக்கொள்கிறது,”

என்ற பேரூர் பொதுக்குழுவின் தீர்மானத்தை, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் திராவிடத்து மக்களிடையே இந்த மே தின விழா வாரத்தில் எடுத்துச் சொல்ல இருக்கிருர்கள்.

பிறந்த ஜாதியின் பெருமையோ, இரும்புப் பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கும் பணத்தின் பெருமையோ நாட்டுக்கு நன்மை பயப்பன வல்ல; தொழிலாளரின் உயர்வு அவர்களின் உதடுகளிலே தவழும் புன்சிரிப்பு, வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளையெல்லாம் பெற்று எதிர்காலத்தைப் பற்றி நல்ல நம்பிக்கையுடன் வாழும் தொழிலாளரின் உள்ளங்களிலிருந்து வெளிவரும் நகைப் பொலி — இவைதான் ஒரு நாட்டுக்கு நன்மை பயப்பன என்பதை இந்த மேதின விழாவில்தான் உலகம் உணர்ந்து கொள்கிறது.

மே தின விழாவில், அந்தப் பெரு மக்களிடையே நிலவும் மகிழ்ச்சி என்றும் நீடிக்க எதைச் செய்யவேண்டுமோ அப்பணியினை ஆற்றத் தொழிலாளர்கள் முன்வரவேண்டும்.

வாழ்க தொழிலாளர்கள்! வளர்க அவர்தம் பெருமை!!

## தெரிந்ததுதானே!

மணிலா, எப். 28—

‘சீட்டோ’ இராணுவத்திற்கான செலவை, அதில் உறுப்பினர்களாகியுள்ள பெரிய வல்லரசுகள் ஏற்குமென தகவல் ஒன்று கூறுகிறது.

# பொதுத் தேர்தல் பற்றிய ருசிகர தகவல்கள்

## தேர்தல் குழு அறிக்கை தரும் தகவல்

“இந்தியா முழுவதற்குமாக வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு, 3,84,215 ரீம் காகிதம் உபயோகிக்கப்பட்டது.

16,000 குமாஸ்தாக்களுக்கு மேல் 6 மாத காலத்திற்கு இந்தப் பட்டியல் தயாரிக்க நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

மொத்தமாக 26,120 அபேட்சைப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன; அவற்றில், 1,538 பத்திரங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன; 4,347 பேர் அபேட்சையைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்; ஆக, 17,235 பேர் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

வாக்காளர்களின் விரலில் குறியிடுவதற்காக ரூ. 2 லட்சம் பெறுமான அழியாத மை உபயோகிக்கப்பட்டது.

சுமார் 60 கோடி வாக்குச் சீட்டுக்கள் தயாரிப்பதற்காக, 180 டன் காகிதம் உபயோகிக்கப்பட்டது; இதன் விலை மதிப்பு சுமார் 10 லட்சம் ரூபாய்.

“‘வாக்குப் பெட்டி’களுக்காக 122 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாகவே 24 லட்சம் இரும்புப் பெட்டிகள், ஒரு லட்சம் மரப் பெட்டிகள் தயாரிப்பதற்காகச் செலவிடப்பட்டது.”

இந்த ருசிகரமான சில விபரங்கள், தேர்தல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் காணக்கிடக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலின் போது மொத்தம் 122 இடங்களில் நடைபெற்ற தேர்தல்கள் செல்லத் தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டதினுல் 196 பேர் பதவி இழந்தனர் என்று தெரியவருகிறது

இந்தியா முழுவதும் நியமிக்கப்பட்ட 66 தேர்தல் விசாரணைக் குழுக்களிடம், 314 விண்ணப்பங்கள் தாக்கலாயின.

மந்திரிகளாயிருந்தோர் மீது 17 புகார் மனுக்களும், முதன் மந்திரிகளாயிருந்தோர் மீது 4 புகார் மனுக்களும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்றுகூறி தாக்கலாயிருந்தன; அவைகளில் மூன்று மனுக்கள் ஒரே ஒரு முதன் மந்திரியின் தேர்தல் செல்லாதெனக் கூறின.

தேர்தல் விசாரணைக் குழுவிற்காக 1953—54-ம் ஆண்டுவரை சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாயிற்று. இந்தச் செலவு, மத்திய அரசாங்கத்தாலும், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டதாம்.

27,915 அபேட்சகர்களும், அவர்களின் 3,187 ஏஜெண்டுகளும் கலந்துகொண்ட கடந்த பொதுத் தேர்தலின்போது செலவு செய்த தொகைக்கான கணக்கினை 7,224 அபேட்சகர்களும், 855 ஏஜெண்டுகளும் தேர்தல் கமிஷனுக்கு தாக்கல் செய்யாதிருந்தனர்; அவர்கள் எல்லாம் மீண்டும் தேர்தலில் பங்கு பெறக்கூடாதென தேர்தல் கமிஷன் உத்திரவிட்டிருந்தது. ஆனல் பின்னர் அவர்கள் கணக்கு தாக்கல் செய்யாதிருந்தது, வேண்டுமென்று அல்லவென்றும், ‘தாக்கல் செய்ய வேண்டுமென்ற சட்டமறியாதவர்களாயிருந்தனர்’ என்பதாலும் தான் என்றறிந்து, அவர்கள் மீது விதித்திருந்த தடையை நீக்கியது தேர்தல் கமிஷன்.

இந்த விவரங்களும்கூட தேர்தல் கமிஷனின் பேரறிக்கையில் காணப்படுகின்றன.

# எண்ணெய் வகைகள்

## இந்தியாவின் தேவை ஈடு செய்யப்படும்

### தென்னுட்டில் ஒரு சர்க்கார் அச்சகம் நிறுவப்படுமாம்!

இந்தியாவுக்குத் தேவையான பெட்ரோலும், எரி எண்ணெயும், இந்த ஆண்டு இறுதிக்குள் சுயநிறைவை எய்தும்; ஆனல், ‘க்ரூட்’ எண்ணெய் இறக்குமதி செய்யப்படவேண்டியது தான்,” என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

பம்பாயில் கட்டப்பட்டிருக்கும் இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் முழு அளவில் உற்பத்தி செய்யுமென்றும் அதன் காரணமாக, பெட்ரோலைப் பொறுத்த மட்டில் இந்தியா சுயநிறைவை அடைந்துவிடும் என்றும் குறிப்பிடப்பட்டது.

பம்பாயில் உள்ள பர்மா-ஷெல், ஸ்டாண்டர்டு வாகுவம் கம்பெனிகள் இரண்டும் ஆண்டு ஒன்றுக்கு 1,11,17,3 530 டன் பெட்ரோலும் 10,41,938 டன் எரி எண்ணெயையும் தயார் செய்யுமென கூறப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், தென்னிந்தியாவில் ஒரு சர்க்கார் அச்சகம் நிறுவப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

நிறுவப்படப்போகும் இந்த சர்க்கார் அச்சகம் எங்கு அமைக்கப்படும் என்பது உறுதியாகவில்லை என்ருலும், பெங்களூர் தகுதியான இடமென்று கருதப்படுகிறதாம்.

# தேர்தலுக்குத் தயாராகிறது!

## பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் உறுதி மொழிகள்

“பிரிட்டனில் மே 26-ந் தேதி துவங்கும் பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றினுல், நீர்வளிகுண்டு சோதனைகளை உடனடியாக நிறுத்தவும், பார்மோசாவை இராணுவ சூனியப் பிரதேசமாக்கவும், ஜெர்மனியை இணைக்கவும் முயற்சிக்கும்,” என்று பிரிட்டன் தொழிற் கட்சியின் தேர்தல் அறிக்கையில் காணப்படுகிறது.

“நீர்வளிக் குண்டு ஆபத்தைத் தவிர்க்க உடன் ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும்; எஃகுத் தொழிற்சாலை மீண்டும் தேசிய மயமாக்கப்படும்; சாம்ராஜ்ய காமென்வெல்த் ஐக்கியத்தை நீடித்து, ஒவ்வொரு காலனி நாடும் வளர்ச்சியடையுமாறு கவனிக்கப்படும்,” என்றும் வாக்காளர்களுக்கு தொழிற் கட்சி உறுதி மொழி தந்துள்ளது.

தேர்தல் அறிக்கையில், கம்யூனிஸ்டு சீனவை ஐ. நா.-வில் சேர்க்கும்படியும், குவெமாய், மட்சு தீவுகளை சியாங் படைகள் காலி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# என்ன பலன்?

மங்களூர், எப். 28—

நிலச் சீர்திருத்தப் பிரச்சினை அவசரமானதென்றும், நில அனுபவ உரிமையையும், நிலவுடைமை வரம்பையும் நிர்ணயிக்க வேண்டியது அவசியமென்றும் முதன் மந்திரி காமராசர் இங்கு தெரிவித்திருக்கிருர்.

“நிலச் சீர்திருத்தம் அரசியல் நோக்கங் கொண்டது அல்ல; அது ஒரு சமூகப் பிரச்சினை; விவசாயிகள் அவசியமில்லாது நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிருர்கள்,” என்றும் காமராசர் கூறியிருக்கிருர்.

One side of the page is dark

# அமெரிக்க ஆதிக்கத்திற்கு சைகோனில் எதிர்ப்பு!

## உள்நாட்டுப் போர் ஆரம்பம்; பலர் பலி!

சைகோன், எப். 28—

தெற்கு வியட்நாமில் திடீரென உள்நாட்டுப் போர் மூண்டுவிட்டது. இதனால் ஏராளமான மக்கள் உயிரிழந்தனராம்; நகரின் பல பகுதிகள் தீக்கிரையாயிற்றும்!

120 பேர் மாண்டதாகவும், 300 பேர் காயமுற்றதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

இதற்கிடையில் வியட்நாமின் முன்னாள் அதிபர் பாவோ டாய், பிரதமர் டியேம் என்பவரை கானஸ் நகருக்கு அழைத்திருக்கிறார்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரங்களை ஜெனரல் நிகின் வான் என்பவருக்கு அவர் அளித்துவிட்டாராம்.

சைகோனில் சர்க்கார் படையினருக்கும் சர்க்காரை எதிர்க்கும் தனிப்பட்டோர் படையினருக்கும் பெரும்போர் நடக்கிறதாம்.

பிரதமர் டியேம் நிர்வாகத்தை எதிர்க்கும் பின் ஜுயன் படைகள், சைகோன் மீது நடத்திய தாக்குதல் பலமானது என்று கருதப்படுகிறது.

பீரங்கிகள், கவச மோட்டார்கள், மெஷின் துப்பாக்கிகளுடன் காலாட்படைகள் உள்நாட்டுப் போரில் இறங்கிவிட்டனவாம்; இரவு நேரத்திலும் சண்டை நடைபெற்றதாம்.

காலையில் மரணமடைந்தோரின் பிணங்களை அகற்ற இருதரப்பினரும் சிறிது நேரம் போரை நிறுத்துவதென முடிவு செய்தனராம்.

இக்கலகத்தில் பிரெஞ்சுப் படைகள் கலந்து கொள்ளாது என்றும் பிரெஞ்சு மக்களின் உயிரையும், சொத்துக்களையும் பாதுகாக்க மட்டும் பிரெஞ்சுப் படைகள் தயாராக இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் தென்வியட்நாமின் தனித் தூதுவரை உடனடியாக அழைத்திருக்கிறார். சைகோனில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரை பற்றிக் கலந்தாலோசிக்கவே இந்த ஏற்பாடாம்.

இப்போதுள்ள பிரதமர் டியேமை நீக்கிவிட்டு புதிய மந்திரி சபை ஒன்றை அமைப்பது பற்றி தென் வியட்நாம் அரசியல் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துமாறு வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்திற்கு வாஷிங்டனிலிருந்து செய்தி சென்றிருக்கிறதாம்.

## முற்றிவிட்ட பக்தி!

ஏழுமலையானுக்கு காணிக்கையாக செந்தேள்!

திருமலை, எப். 27—

திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் வித விதமான காணிக்கையளிப்பர்.

'பகவானுக்கு'ப் பிரார்த்தனையாக மொட்டைகூட அடித்துக் கொள்பவர்கள்தானே அந்த பக்தர்கள்!

'பக்தி' முற்றிவிட்ட ஒருவர், செந்தேள் ஒன்றையே பிடித்து வந்து, உண்டியலில் 'கோவிந்தனு'க்குக் காணிக்கை செலுத்தியிருக்கிறார்.

நேற்று முன்தினம் உண்டியலை உடைத்துப் பார்த்தபொழுது, அதில் வழக்கமாகக் கிடைக்கும் பணம், பொன், வெள்ளிப் பொருள்கள் தவிர, சாண் நீளமுள்ள செந்தேள் ஒன்றும் காணக் கிடந்ததாம்.

பொருளை எண்ணிக்கொண்டிருந்த நிர்வாகிகள் பீதியடைந்தனர் என்றும், பின்னர், தேளை அடித்துக் கொன்றனர் என்றும் தெரிகிறது.

இப்போதுதான் முதன் முறையாக, உண்டியலில் பொன் பொருளோடு சேர்த்து தேள் ஒன்றும் காணிக்கை செலுத்தப்பட்டிருக்கிறதாம்.

## நலம் பெற்றவன் நலிந்தவனுடன் வேதாந்தம்பேசுவதா?

ஆந்திர சட்ட சபையில் கவர்னர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில், ராயலசீமை மக்களின் தேவைகள் வற்புறுத்தப்பட்டன.

தோழர் பி. ராமா ரெட்டி பேசுகையில், "சர்க்கார்" மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ராயல சீமையின் தாழ்ந்த நிலைபற்றி எடுத்துச் சொல்லப்படுகையில், ஆந்திரா முழுமையும் ஒரே கண் கொண்டு பார்க்கவேண்டுமென்றும், ராயலசீமை என்றும், 'சர்க்கார் மாவட்டங்கள்' என்றும் பிரித்துப் பேசக் கூடாதென்றும் கூறுகிறார்கள்; ஆனால், புதிய திட்டங்கள் அனைத்தும் சர்க்கார் மாவட்டங்களுக்கே செல்லுகின்றன; இந்தப் பேச்சு எப்படியிருக்கிறதென்றால், மிகவும் வசதிகளுடன் வாழும் மனிதன், நலிந்துபோயுள்ள தனது நண்பனுடன் வேதாந்தம் பேசுவதைப் போலிருக்கிறது," என்று கூறினார்.

## கைக்கடிகாரங்கள் கள்ளக் கடத்தல்

"இந்திய சுங்க அதிகாரிகள், 1953—54, 1954—55 பிப்ரவரி 28-ந் தேதி வரை கைப்பற்றிய கள்ளக் கடத்தல் கைக்கடிகாரங்களின் மொத்த மதிப்பு முறையே ரூ. 7,77,000; ரூ. 6,03,000 ஆகும்" என்று, இந்தியப் பாராளுமன்ற மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

# நாடு விடுதலை பெற கம்யூனிஸ்டுகள் உதவியையும் ஏற்பாராம்!

## டுனீஷிய தலைவர் கருத்து-விளக்கம்

பாரிஸ், ஏப். 29—

டுனீஷிய தேசியத் தலைவரான ஹபிப் போர் கிபூபா, பிரான்சும், அமெரிக்காவும் உதவி தருமானால், டுனீஷியா பதினைந்து ஆண்டுகளில் பூரண சுதந்திரம் அடையும் என்று கூறினார்.

தனது சுதந்திரத்தைப் பெற, டுனீஷியா, பிரான்சுடன் போராடும்; கம்யூனிஸ்டுகளின் உதவியைக்கூட ஏற்றுக் கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நாங்கள் பிரான்சின் உதவியுடன் சுதந்திரத்தை நோக்கிச் செல்வோம்; பிரான்சும், அமெரிக்காவும் எங்களுக்கு உதவவில்லை என்றால், நாங்கள் எந்த உதவியையும்கூட ஏற்றுக்கொள்வோம்"

என்று அவர் மேலும் கூறினார்.

"டுனீஷியாவின் பூகோள அமைப்புப்படி அது மேற்கத்திய நாடுகளுடன்தான் கூட்டுச் சேர வேண்டியிருக்கிறது; ஆகவே, சுதந்திரம் பெற்ற டுனீஷியா, பிரான்சுடனும், மேற்கத்திய நாடுகளுடனும் நட்புறவு கொள்ளும்," என்று அவர் உறுதியளித்தார்.

"டுனீஷியாவின் அடுத்த வேலை, புதிய சட்டசபை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்குவதுதான்," என்று அவர் குறிப்பிட்டார்.

"பிரிட்டிஷ் காமன்வெல்த் போன்ற யூனியன் அமைப்பு ஒன்றை பிரான்சு ஏற்படுத்துமானால், டுனீஷியா, தான் சுதந்திரம் பெற்றவுடன் அந்த யூனியனில் சேர்ந்துகொள்ளும்" என்றும் அவர் கூறினார்.

## நன்கொடையை திருப்பிதாருங்கள்

இந்திரா காந்திக்கு பம்பாய் கோரிக்கை

பண்டித நேருவின் குமாரி இந்திரா காந்தியினால் நடத்தப்படும் 'தீபாவளிப் பரிசு நிதி'க்கு பம்பாய் மாநில மத்திய பஞ்ச நிவாரண நிதியிலிருந்து முன்னர் ரூ. 25,000 கொடுக்கப்பட்டதாம்.

தோழியர் இந்திரா காந்தி இப்பணத்தை வெளிநாடுகளில் சேவை புரியும் இந்திய வீரர்களுக்கு தீபாவளியன்று பரிசுகள் அனுப்ப செலவழிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

பம்பாய் மாநில மத்திய பஞ்ச நிவாரணக் குழுவினர் மொத்தமாக இந்திரா காந்திக்கு ரூ. 25,000 அனுப்பிவிடுவது என்றும், பம்பாய் மாநிலத்திலிருந்து தனிப்பட்டோர் அனுப்புவதைக் கொண்டு அத்தொகையை ஈடுகட்டிவிடலாம் என்றும் நினைத்தனராம்; ஆனால் பின்னர், தனிப்பட்டவர்கள், நேரடியாக தங்கள் நன்கொடைகளை 'தீபாவளிப் பரிசு நிதி'க்கு இந்திரா காந்திக்கு அனுப்பிவிட்டார்களாம்.

பம்பாயில் கவர்னராக இருந்த காலஞ்சென்ற கிரிஜாசங்கர் பாஜ்பாய், இந்திரா காந்திக்குக் கடிதம் எழுதி 'தீபாவளிப் பரிசு நிதி'யில் பணம் ஏதும் மீதம் இருந்தால் அதிலிருந்து, தாங்கள் மத்திய பஞ்ச நிவாரண நிதியிலிருந்து அளித்த பணத்தை திருப்பி அனுப்புமாறு எழுதுவதாக இருந்தார்; அவர் திடீரென இறந்து போனதால் கடிதம் எழுத இயலாதுபோயிற்று.

இப்போது எஸ். கே. பட்டீல் தலைமையில் உள்ள பம்பாய் மாநில மத்திய பஞ்ச நிவாரண நிதிக் குழுவினர், மீண்டும் அப்பணத்தை திருப்பி அனுப்பக் கோரி கடிதம் எழுதுமாறு தற்போதைய கவர்னர் ஸ்ரீபிரகாசாவை கேட்டுக் கொண்டனர்.

இச்செய்தியை எஸ். கே. பட்டீல் தெரிவித்திருக்கிறார்.

# 'தேவேந்திர குலத்தினருக்கு மந்திரி சபையில் இடம் வேண்டும்'

## சென்னை முதலமைச்சருக்குக் கோரிக்கை

கோவை, எப். 28—

கோவை மாவட்ட நான்காவது தேவேந்திர குலத்தார் மாநாடு சனிக்கிழமையன்று நடைபெற்றது. முன்னாள் மாவட்ட அதிகாரி எ. துரைராஜ் தலைமை தாங்கினார். மாநாட்டில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தேவேந்திர குலத்தாரிடையே காணப்படும் வகுப்பு வேற்றுமைகளை ஒழித்துக்கட்டவேண்டுமென்றும், அதற்காக அக்குலத் தலைவர்கள் உழைக்கவேண்டுமென்றும், அரிசனங்களிடையேயுள்ள வேறுபாடுகள் ஒழிய கலப்பு மணத்தை ஆதரிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரிசனங்களிடையே காணப்படும் உட்சாதிப் பிரிவுகள், தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு எதிராக இருப்பதால் அப்பிரிவுகளை ஒழித்துக்கட்டவேண்டும் என்று மாநாட்டினர் கேட்டுக்கொண்டனர்.

தமிழ் நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் தேவேந்திர குலத்தவர்கள் என்றும் ஆகவே, மந்திரி சபையில் அவர்களுக்கு இடமளிக்க வேண்டும் என்றும் மாநாடு சென்னை மாநில முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டது.

## விவசாயிகளுக்கு கடன் வசதி

இந்திய சர்க்கார் நிதி ஒதுக்கும்

பெங்களூர், எப். 28—

விவசாயிகளுக்கும், சிறுதொழில் நடத்துகிறவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அடுத்த ஐந்து, ஆறு ஆண்டுகளில், இந்தியா பூராவுக்கும் கடன் வசதி செய்து தர இந்திய சர்க்கார் நிதி ஒதுக்குமென மைசூர் மாநில விவசாய இலாகா மந்திரி நாகண கௌடா கூறியிருக்கிறார்.

## சென்னையில் பஸ் போக்குவரத்து

75 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய மற்றொரு 'லேலண்ட்' பஸ் சென்னை நகரில் ஓடத் துவங்கியுள்ளது. இதைச் சேர்த்து 29 லேலண்ட் பஸ்கள் நகரில் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் ஓட விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 50 - பஸ்களில் இது ஒரு பகுதியாகும் என்று தெரிகிறது.

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு, மாதாந்திர சீசன் டிக்கெட் முறையை மற்ற மார்க்கங்களுக்கும் விரிவுபடுத்த பஸ் இலாகா உத்தேசித்துள்ளதாம்.

நகர பஸ் போக்குவரத்தை கவனிக்கவும், இடைவிடாது பஸ்களின் போக்குவரத்து தொடர்ந்து இருப்பதற்கு ஏற்பாடு செய்யவும் ஒரு விசேட அதிகாரியை நியமிப்பது பற்றியும், பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஆகிய இரு திட்டங்கள் பற்றி சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறார்கள் என்று தெரிகிறது.

எஞ்சினீயரிங் பராமரிப்புப் பிரிவை தனியாகப் பிரித்து, பத்து பஸ்களுக்கு ஒரு 'போர்மென்' நியமிப்பது பற்றியும் மற்றொரு ஏற்பாடு இருக்கிறது.

## கண் நோய்க்கு இலவச சிகிச்சை

சேலம் டாக்டர்களின் உதவி

ஏழை மக்களுக்கு இலவசமாகக் கண் சிகிச்சை செய்ய அமைப்பு ஒன்றை சேலம் ரோட்டரி கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன் ஆரம்ப விழா சி. எஸ். பாஸ்கர் அவர்களால் நடத்தப்பட்டது. சுமார் 120 பேர் இலவச சிகிச்சைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த உதவியை, டாக்டர்கள் வாளேஸ்வரன், குமாரசாமி, மகாதேவன், பத்மனாபன், எஸ். குருபாதம், கே. ஜி குருபாதம், ராமச்சந்திரன் ஆகியோர் செய்ய முன்வந்துள்ளனர்.

கண் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சேலம் நகர சபைக் கல்லூரியில், 'கில்டு வீசினர்' இலவச உணவு, இருப்பிடம் தருவர் என்று தெரிகிறது.

# '23 வயதிற்குள் திருமணம் கூடாது'

## அதிகாரிகளுக்கு பீகார் சர்க்கார் உத்தரவு

பாட்னா, எப் 29—

பீகார் சர்க்கார் அலுவலக ஊழியர்கள் 23 வயதிற்குள் திருமணம் செய்துகொள்வது கூடாதென்றும் 23 வயதிற்குள் திருமணம் செய்து கொள்பவர்களை, சர்க்கார், உத்தியோகங்களுக்கு எடுத்துக் கொள்வது இல்லை என்றும் பீகார் சர்க்கார் உத்தரவிட இருக்கிறார்கள்.

இச்செய்தியை பீகார் மேல்சபையில் டாக்டர் சின்ஹா கூறியுள்ளார்.

'இந்த உத்தரவு எந்த சர்வீசுகளில் பணியாற்றுவோருக்கு பொருத்தமாகும்,' என்பது பற்றி சர்க்கார் யோசித்து வருகிறதாம்.

இப்படி உத்தரவு பிறப்பிக்க நேரிட்ட காரணங்களைப் பற்றி அவர் கூறுகையில், இப்போது சர்க்கார் கிராமப்புறங்களில் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதாலும், அங்கு மருத்துவ வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதால் அங்கே உள்ள சர்க்கார் அதிகாரிகள் திருமணம் ஆகி குழந்தைகளுடன் வாழ்ந்தால் மிகவும் தொல்லை ஏற்படுகிறது என்பதாலும்தான் இந்த ஏற்பாடுகள் என்று விளக்கினார்.

"பெரும் குடும்பத்துடன் தனது வாழ்வை ஆரம்பிக்கும் மனிதன் தனது பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றுவது இயலாது," என்று சர்க்கார் கருதுகிறது.

"அதுமட்டுமின்றி, கிராமங்களில் பணிபுரியும் அதிகாரிகள் திருமணம் ஆகாதவர்கள் என்றால், அவர்கள் குடியிருக்க இடம் கிடைப்பது சுலபமாக இருக்கிறது," என்று சர்க்கார் கருதுகிறதாம்.

## சியாங் சர்க்கார் இடம் மாறுகிறது!

தைப்பே, எப். 28—

பார்மோசா தீவின் மாகாண சர்க்கார் தனது தலைமைக் காரியாலயத்தை, தைப்பேயிலிருந்து டைசங் என்னும் இடத்திற்கு மாற்ற முடிவு செய்திருக்கின்றனர்.

டைசங் என்னும் நகரம், பார்மோசா தீவின் மத்தியப் பகுதியில் இருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்டுகளின் விமானத் தாக்குதல் ஏற்படும் என்று அஞ்சியே மாநில சர்க்கார் தனது தலைநகரை மாற்றுகிறது என்று கூறப்படுகிறது. இந்தத் தலைநகர் மாற்றம் சீக்கிரமே நடைபெறும் என்று தெரிகிறது.

தேசியச் சீனாவின் சர்க்கார் மட்டும் தைப்பேயில் இருக்குமாம்; ஆனால், இந்த சர்க்காரின் உத்தியோகஸ்தர்கள் பலர் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுவர் என்று தெரிகிறது.

## சூ-என்-லாய் - டல்லஸ் சந்திப்பு?

பார்மோசா பிரச்சினை தீர சீனப் பிரதமர் சூ-என்-லாய் கூறிய யோசனையை பிரிட்டன் வரவேற்றிருக்கிறது.

பாண்டுங் மாநாட்டில் சீனப் பிரதமர் விடுத்த அறிக்கை பற்றி விளக்கம் கேட்குமாறு பீகிங்கில் உள்ள பிரிட்டிஷ் தூதுவருக்கு பிரிட்டிஷ் வெளிநாட்டு இலாகா அமைச்சர் மாக்மில்லன் உத்தரவிட்டிருக்கிறார்.

இதற்கிடையில், கூடிய சீக்கிரம் சீனப் பிரதமர் சூ-என்-லாயும், அமெரிக்க அமைச்சர் டல்லசும் கூடிப் பேசுவார்கள் என்று லண்டனில் கருதப்படுகிறது.

சீனத் தலைநகரில் உள்ள பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மூலமாக ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டவுடன் இச்சந்திப்பு நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

'பார்மோசாவை பலாத்காரமாக விடுவிக்க சீனா முயற்சிக்கக் கூடாது,' என்ற நிபந்தனையின் பேரில் தான் அமெரிக்கா, சூ-என்-லாயின் யோசனைக்கு தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறது; ஆனால், சீனாவுக்குப் பார்மோசாவின் மீதுள்ள உரிமையை விட்டு விடுமாறு டல்லஸ் கோரவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# சைகோனில் நெருக்கடி

## ஆயிரம் பேர் படுகொலையாயினர்!

உள்நாட்டுப் போர் உச்சம் பெறுகிறது

சைகோன், ஏப். 29—

தென் வியட்நாமில் உள்நாட்டுப் போர் உச்ச கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. பீரங்கிகளும், வெடிகுண்டுகளும் சர்வசாதாரணமாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த இருநாட்களாக நடைபெற்ற கடும்போரின் விளைவாக உயிரிழந்தோர் ஆயிரம் பேருக்குமதிகமாக இருக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; எண்ணற்றோர் படுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனராம்.

**ஆட்சிபீடத்தில் யார் இருப்பது, அதிகாரம் எவரிடமிருப்பது என்ற அதிகார அரசியல் வெறியின் விளைவாக நடைபெறும் இந்தக் கோர நிகழ்ச்சிகளினால் இரண்டு லட்சம் பேர் வீடிழந்திருக்கின்றனர்; அவர்களுடைய வீடுகள் நாசஞ்செய்யப்பட்டிருக்கின்றன.**

அரசியல் நெருக்கடி பற்றி மந்திராலோசனை நடத்த வருமாறு தென் வியட்னம் முன்னாள் மன்னர் பாவோ-டாய் பிரதம மந்திரி டிங்-தின்-தியெமுக்கு நேற்று உத்தரவிட்டிருந்தார்—பிரான்ஸ் நாட்டிலிருந்துகொண்டே!

'இந்த உத்தரவுக்குப் பணிந்து பிரான்சுக்குச் சென்று பாவோ-டாயைச் சந்திக்க வேண்டியதில்லை,' என்று தென் வியட்நாம் மந்திரிசபை நேற்று முடிவெடுத்திருக்கிறது.

அதை ஒட்டி, தாம் பிரான்ஸ் செல்லப்போவதில்லை என்று அறிவித்துவிட்டதுடன், தின்-தியெம், தொடர்ந்து பின்-ஜுயின் படைகளைத் தாக்குவதற்குப் போர் நடத்துமாறு தமது துருப்புகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

பிரதமர் தின்-தியெமுக்கு அமெரிக்க ஆதரவு இருந்துவருகிறது தொடர்ந்து ஆதரவு கிடைக்குமென நம்பப்படுகிறது.

இராணுவ அதிகாரம் முழுவதையும் பறித்து இராணுவ இன்ஸ்பெக்டர்-ஜெனரலான வான்-வை என்பவரிடம் மன்னர் பாவோ-டாய் வழங்கியிருக்கிறார்.

ஜெனரல் வான்-வை என்றஅந்த இராணுவ அதிகாரிக்கும் பிரதமர் டிங்-தின்-தியெமுக்கும் ஏற்கனவே கருத்து வேறுபாடு உண்டு. தின்-தியெம் தம்மைக் கைது செய்யாமலிருப்பதற்காக அவர் சமீபத்தில் தான் வடக்கேயுள்ள தலாதி என்ற நகருக்கு சைகோனிலிருந்து ஓடி ஒதுங்கியிருந்தார்.

அவர், மன்னர் பாவோ-டாய் தமக்கு இராணுவ அதிகாரங்கள் முழுவதையும் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அறிந்து சைகோன் திரும்பியிருக்கிறார்.

மன்னர் உத்தரவுப்படி, தன்னிடமிருந்த இராணுவ அதிகாரங்களை பிரதமர் தின்-தியெம், வான்-வையிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டிருக்கிறார்; என்றாலும் பல இராணுவ அதிகாரிகள் வான்-வை பக்கம் சேர்ந்துகொண்டிருக்கின்றனர்.

வலிமை மிகுந்த சொந்த இராணுவம் கொண்டுள்ள பின்-ஜுயின், ஹோவா-ஹாவோ என்ற மதப் பிரிவினருக்கும், பிரதமர் தின் - தியெமுக்குமிடையே இப்போது உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது.

பின்-ஜுயின் மதப் பிரிவைச் சேர்ந்த வான்-சாங் என்பவரை போலீஸ் தலைமை அதிகாரி பதவியிலிருந்து பிரதமர் தின்-தியெம் சில தினங்களுக்கு முன்பு 'டிஸ்மிஸ்' செய்தார்.

பின்-ஜுயின் மதப் பிரிவினர், ஹோவா-ஹாவோ மதப் பிரிவினர் ஆகியோர், 'பிரதமர் தின்-தியெம் அதிகாரத்தைவிட்டு விலக்கப்பட வேண்டும்,' என்று கிளர்ச்சி செய்பவர்கள்.

'தின்-தியெம் கம்யூனிஸ்டுகளுக்கு ஆக்கம் தருகிறார்,' என்பது, பின்-ஜுயின் கலகக்காரர்களின் புகார்களுள் ஒன்று; ஆனால், தின்-தியெமோ, 'இந்தக் கலகங்களெல்லாம் கம்யூனிஸ்டுகளின் தூண்டுதல்,' என்று கூறியிருக்கிறார்.

(முன்னர் வந்த செய்திகளை 3-ம் பக்கம் பார்க்கவும்)

## தாழ்த்தப்பட்டோர் மதம் மாறினால்!

### கல்விச்சலுகை தரமுடியுமா?

மந்திரியின் ஆலோசனை

"புத்தமதத்தைத் தழுவிய பின் தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது பெற்றுவரும் கல்விச் சலுகைகளைப் பெறுவரா?" என்று; தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற இலாகா மந்திரி, சென்னை சட்ட இலாகாவிடம் கேட்டிருக்கிறாராம்

டாக்டர் அம்பேத்கார், தனது வழி நடப்போரை எல்லாம் கூட்டமாக புத்தமதத்தைத் தழுவச் செய்யப் போவதாக அறிவித்துள்ளதை ஒட்டியே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதாம்.

தாழ்த்தப்பட்டவர்களில் கிருஸ்துவ மதத்தினைத் தழுவியிருப்பவர்களுக்கு; இப்போது கல்லூரி நிலையிலும், ஆரம்பப்பள்ளி முதல் எட்டாம் படிவம் வரையிலும் இலவசமாகக் கல்வி பெறும் சலுகை தரப்பட்டிருக்கிறது.

எட்டாம் படிவம் முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை உள்ள உயர்நிலைப்பள்ளி படிப்பின்போது அவர்களுக்கு பாதிச் சம்பளச் சலுகை மட்டும் கிடைக்கிறது இதுகூட போதுமான நிதி இல்லாமையினால் தான். தேவையான அளவு நிதி கிடைக்கும்போது, உயர் நிலைப் பள்ளி நிலையிலும் அவர்களுக்கு சம்பளமே இல்லாத கல்விபெறும் சலுகை கிடைக்கும் என்று தெரிகிறது.

## இம்பீரியல் பாங்கி நஷ்ட ஈடு

### காங்கிரசாரிடை அதிருப்தி

"இம்பீரியல் பாங்கியை சர்க்கார் மயமாக்குவதில், மார்க்கெட் நிலவரப்படி நஷ்டஈடு கொடுக்க சம்மதித்துள்ளதுபோல், இனி சர்க்கார் மேற்கொள்ளும் எல்லாச் சொத்துக்களுக்கும்நஷ்டஈடு தருவதிலும் பின்பற்றப்படமாட்டாது;" என்று பிரதம மந்திரி நேருவும், நிதி மந்திரி தேஷ்முக்கும் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் உறுதி கொடுத்திருக்கின்றனர்.

சர்க்காரின் முடிவு, பல காங்கிரசாரிடையே அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளதாம்.

இம்பீரியல் பாங்கியின் ரூ 20 கோடிக்கு சிறிது அதிகமான சொத்துக்களுக்காக ரூ. 19 கோடி வரை நஷ்டஈடு தர சம்மதிக்கப் பட்டிருக்கிறதாம்.

## அணுமூலப் பொருள் கண்டு பிடிக்க!

அமெரிக்காவில் உள்ள யூடா மாநிலப் பகுதியில் உரேனியச் சுரங்கங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஆயிரக் கணக்கான பேர் போட்டி போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார்களாம். அவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறதாம்.

முன்னொரு காலத்தில், மேற்கு அமெரிக்காவில் நடைபெற்ற தங்கச் சுரங்க வேட்டையை இது நினைவூட்டுகிறதாம்.

★★★★★★★★★★★★★★★★

## சென்னையில் மே தின அணிவகுப்பு

### திரண்டு வாரீர்

★

"1—5—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் தலைமையில் மே தின ஊர்வலம் திரு. வி. க. (கான்ரான்ஸ்மித்நகர்) திடலிலிருந்து புறப்பட்டு, 'டவுடன்', 'நேவல் ஆஸ்பிடல் ரோடு', 'சிந்தாதிரிப் பேட்டை மார்க்கெட்டு', 'செயிட்டி டாகீஸ்', 'மவுண்ட் ரோடு', 'பை கிராப்ட்ஸ் ரோடு' ஆகிய வீதிகளின் வழியாகச் சென்று, திருவல்லிக்கேணி கடற்கரையை வந்தடையும்.

"எல்லா கிளைக் கழகங்களும், தங்களது கிளையின் வட்டப் பெயருடன் கழகக் கொடியேந்தி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"இயக்கப் பற்றுள்ள மன்றங்களும், தொழில் நிலையங்களும் இம்மே தின ஊர்வலத்தைச் சிறப்பிக்குமாறு கோருகிறோம்.

"மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாவட்டக் கழகம் ஒரு மாபெரும் வரவேற்பு அளிக்கும்.

"பொதுச் செயலாளரின் மே தினச் செய்தி கேட்க, திராவிடப் பெருங்குடி மக்களையும், பாட்டாளித் தோழர்களையும் திரண்டு வருமாறு அழைக்கிறோம்,"

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★

## கழகக் கூட்டம்

★

கன்னடிப்பாளையம்

1—5—55 மாலை 5 மணியளவில், கன்னடிப்பாளையம் தி. மு கழகச் சார்பில், தோழர் த. சோமசுந்தரனார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஆ மணிஎழிலன், ம. கலைசேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

சென்னை 9-வது வட்ட தி. மு. கழகம்

1—5—55 காலை 9 மணிக்கு கழகப் பணி மனையில் மே தின விழா கூட்டம் நடைபெறும் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

நிர்வாக உறுப்பினர் கூட்டம்

30—4—55 இரவு 8-30 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, கழக ஆக்க வேலைகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை தி. மு. கழக ஆண்டு விழா

1—5—55 காலை 9 மணியளவில் கொமாரசாமி செட்டி தெருவில் தோழர் பி. பி. பத்மநாபன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. ஏ. மதியழகன், கண்ணதாசன், முகவை - ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

## சத்தியவாணிமுத்து

### சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்:

★

1—5—55: திண்டுக்கல்
காலை: ஊழியர்கூட்டம்
மாலை: பொதுக்கூட்டம்
2—5—55: அய்யம்பாளையம்
3—5—55: முத்துப்பேட்டை

# நாகர்கள் பகுதியில் கலவரம்

## மூவர் பலி; 60 வீடுகள் தீயிடப்பட்டன

ஷில்லாங், ஏப். 29—

தென் கிழக்கு எல்லைப்புற ஏஜென்சி பிரதேசத்தில் அசாம் ரைபிள் டிவிஷன் படையினர் தியூன்சங் என்னுமிடத்தில் மூன்று புரட்சி மலைஜாதியினரை சுட்டுக் கொன்றனர் எனத் தெரிகிறது.

'நாக்லோக்' என்னும் கிராமத்தில் உள்ள 60 வீடுகளை நாகர்கள் தேசியக் குழுவின் ஆதரவாளர்கள் தீயிட்டுக் கொளுத்தினர் என்றும் பத்திரிகை குறிப்பு ஒன்று கூறுகிறது.

அலுனிதோ பகுதியில் உள்ள கிராம மக்களை அடக்க அதிகாரி ஒருவர் ரைபிள் படையினருடன் சென்றாராம்.

சர்க்கார் படைகளை சிறிது நேரம் தற்காப்புக்காகத் தாக்கிய பின்னர், அக்கிராம மக்கள், காடுகளுக்கு ஓடிவிட்டனர் என்று சொல்லப்படுகிறது; அவர்களில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்

தீயிடப்பட்ட பகுதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் டாக்டர்களுடன் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களின் தேவைகளுக்கென்று 150 மூட்டை அரிசி, 30 மணங்கு உப்பு, 300 கம்பளிப் போர்வைகள், 600 செஜ்ம் துணி ஆகியவற்றை விமானத்திலிருந்து கீழே போடுகின்றனராம்.

நாகர்கள் வாழும் பகுதியில் பல இடங்களில் பலாத்காரச் செயல்கள் நடைபெற்றதாக வேறுசெய்திகள் தெரிவிக்கின்றன.

அசாம் கவர்னருக்கு தியூன்சங் பகுதி மக்கள் 4000 பேர் கொடுத்த நல்ல வரவேற்புதான், நாகர்களிடையே ஏற்பட்ட இந்த எதிர்ப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இந்திய சர்க்காருக்கு ஆதரவாக இருக்கும் மலை ஜாதியினரை அச்சுறுத்தும் வகையில் பலாத்காரவாதிகள் சில கிராமங்களில் உள்ள ஆயுதசாலைகளைத் தாக்கினார்களாம்.

சம்பவங்கள் நடைபெற்ற இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

பலாத்காரவாதிகளின் மறைவிடங்கள் பல அழிக்கப்பட்டன வென்றும், சந்தேகவாதிகள் பலர் கைது செய்யப்பட்டனர் என்றும், லைசென்சு பெறாத பல கருவிகளை சர்க்கார் கைப்பற்றியது என்றும் தெரிகிறது.

## தமிழ் நாடெங்கும் மே தின விழா

கோவை—வெள்ளலூர்
2—5—55 மாலை
பேசுவோர்:
என். வி. நடராசன்
எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

செங்கரியலை
3—5—55 மாலை 7 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. சண்முகநாதன்

★

பள்ளிப்பாளையம்
3-5-55 மாலை 6-மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

முத்துப்பேட்டை
ஏ. எஸ். என். திடலில்
3—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து
ந. தருமலிங்கம்

★

ஆலந்தூர் (சென்னை)
4-5-55 மாலை 6-மணிக்கு
தர்மராசா கோவில் மைதானத்தில்
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

முகவூர்
பொன்விழா மைதானத்தில்
4—5—55 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து

★

கோவை—சிங்காநல்லூர்
குமரன் சதுக்கத்தில்
5—5—55 மாலை
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

### பொதுக் கூட்டம் ஒத்திவைப்பு

"மே திங்கள் 1-ந் தேதியன்று, நெல்லை மாவட்டம் பத்தமடையில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு கலந்து கொள்ள முடியாததால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதுடன், பின்னர் நடைபெறும் தேதியும் விரைவில் அறிவிக்கப்படும்" என்று பத்தமடை தி. மு கழகச் செயலாளர் தோழர் ந. பரமசிவம் அறிவிக்கிறார்.

## ஆந்திர - தமிழ் எல்லைப்பிரச்சினை

### 'படம்' தயாராகிறதாம் — பக்குவமாய் தீருமென நம்பிக்கை

சென்னை, ஏப். 28—

சென்னை, ஆந்திர மாநிலங்களுக்குச் சேரவேண்டிய சர்ச்சையுள்ள பகுதிகளையெல்லாம் ஒன்றாக்கி படம் ஒன்று அமைக்கப்படுகிறதாம்.

இப்படம் தயாரானதும், சென்னை சர்க்கார் இப்பிரச்சினை பற்றி ஆந்திர சர்க்காரை அணுகி ஒரு முடிவு காண முயற்சிக்கும் என்று தெரிகிறது.

இந்திய சர்க்காரின் கணக்குப்படி, சித்தூர் மாவட்டத்தில் உள்ள ஆறு தாலுகாக்கள், சேலம் மாவட்டத்தில் உள்ள அரூர், ஓசூர், வடாற்காடு மாவட்டத்திலுள்ள குடியாத்தம், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்னேரி, சத்தியவேடு ஆகிய பகுதிகளில் மொழிவாரி பிரிவினை பற்றிய சர்ச்சை இருக்கிறதாம்.

படம் தயாரிக்கும் முயற்சி, பல வித சச்சரவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்குமென்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

படம் தயாரானபிறகு, சென்னை சர்க்கார் ஆந்திர சர்க்காரை அணுகுமென்றும், அம்முயற்சி தோல்வியுற்றால் எல்லைக் குழு ஒன்றை நியமிக்குமாறு இந்திய சர்க்காரை சென்னை சர்க்கார் கோருமென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் பேலும் தெரிவித்தார்.

இப்பிரச்சினையில், மாநிலப்புனர் அமைப்புக் குழுவிற்கு எவ்வித சம்பந்தமும் இல்லையென்றும், இது, இரண்டு மாநில சர்க்காரும், அல்லது எல்லைக் குழு ஒன்றினாலும் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை என்றும் சென்னை சர்க்கார் கருதுவதாக நிதி அமைச்சர் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு மே. ஜெர்மனி 15 லட்சம் டாலர் பெறுமான துணியையும் நூலையும் சப்ளை செய்யுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.